# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 21 – International Editor : Michael W.Smith – இதழ் - 21


## தெய்வீக ஆராதனையில் சிற்றாலய இசை குறித்த கிறிஸ்தவ மரபு பகுதிகள்



ஹார்லன் சொரல்

இவ்விதழில் தொகுக்கப்பட்டிருக்கும் இசை சம்மந்தமான செய்திகள், திருச்சபைகளில் இசையை வாசிக்க வேண்டாம் என்றோ இசைக்கு விரோதமாகவோ எழுதப்பட்டதல்ல, ஆராதனை என்ற ரூபத்தில் தற்கால இசை மேடைகள் சினிமா உலகத்தையும் மிஞ்சும் விதத்தில் நாடக மேடைகளாகிப்போன அவலத்தை விளக்கவே ஆகும்.தற்கால கிறிஸ்தவ உலகின் இசைப்பாடகர்களின் தவறை சுட்டிக்காட்டிய பிரபல ஊழியர்கள் சகோ.மோகன்.சி.லாசரஸ், சகோ.அகஸ்டின் ஜெபக்குமார், இங்கிலாந்து போதகர் ஆபிரகாம் டேவிட் ஜான், பெங்களூர் போதகர் ரூபன் சத்தியராஜ் ஆகியோரை போடா கொய்யா என கேலி வார்த்தையில் திட்டியும், வாடா போடா என ஒருமையில் மரியாதையில்லாமல் பேசிய பாடகர், அப்படிப்பட்டவர்களை பின்பற்றுவோர் இசையை பற்றிய உண்மைகளை உணர வேண்டும் என்றே வடிக்கப்பட்டுள்ளது.

உலகப்பிரசித்தி பெற்ற போதகர் சார்லஸ் ஸ்பர்ஜன் இசையைக் குறித்து சரியாக ஒரு காரணத்தை கூறுகிறார். ஆடம்பரமான இசைக்கருவிகள் துதி செய்வதற்கு ஏற்புடையதல்ல.பூமியிலே நாம் கேட்கக்கூடிய இனிமையான இசை யாதெனில் வேதத்தை நன்றாய் ஆராய்ந்து அறிந்த வர்களும், சபை வரலாற்றை ஆழமாய் தெரிந்தவர்களும் அப்போஸ்தல சபைகளிலே ஏன் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட வில்லை என அறிந்திருப்பார்கள். சமூக சீர்த்திருத்த வாதிகளான மார்ட்டின் லூதர், ஜான் வெஸ்லி, ஹார்லன் சொரல் ஆகியோரும் கூட ஆவிக்குரிய ஆராதனைகளில் இசைக் கருவிகளின் பயன்பாட்டை தவிர்த்தனர்.பலர் தாங்கள் எழுதுகிற பாடல்களுக்கு இசைக்கருவி களோடு இசைமீட்டி, அதனை சமூக சீர்த்திருத்த காரியங்களுக்கும், பொது இடங்களின் வைபவங்களுக்கும், தனித் துவமாக தாலந்தாக எண்ணி உபயோகித்து மகிழ்கின்றனர். அதே சமயம் கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தில் ஆராதனை கர்த்தருக் குரியது. அங்கே ஆடம்பரமான இசைக்கு வேலை இல்லை. யோவான் 4 : 23-24, அப் 17 : 24-25 ல் சொல்லப்பட்டுள்ள சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள். ஆராதனை என்பது உள்ளான மனுஷனின் உற்சாகமான ஜெபத்திலும், பாடலிலும், துதி ஸ்தோத்திர பலிகளிலும் வெளிப்படும் மகிமையின் பிரசன்னம்.

அது தேவனுடைய உன்னதமான கிருபையின் வரம்.உயிரற்ற இசைக்கருவிகளினால் ஆவிக்குரிய ஆராதனை உயிரடையாது.நம் உதடுகளின் ஸ்தோத்திரபலிகளினால் கர்த்தரை ஆராதித்து மகிமைப்படுத்தும்போது தான் நம் ஆவி ஆத்துமா உயிரடையும் (கலைக்களஞ்சியம் X,651). நம்முடைய சத்தத்தை உயர்த்தி பாடும் இனிமையான பாடலுக்கு எதுவுமே ஈடாகாது.அநேகர் இந்த அழகான சப்தத்தின் இனிமையை இசைக்கருவிகளின்றி இதுவரை கேட்டிருக்க மாட்டார்கள். உங்களில் பலர் கேட்டிருப்பீர்கள். அதுவே ஆத்துமாவுக்கு உற்சாகத்தை தரும். ஆவியிலே அனலாய் அபிஷேகத்தோடு, பரலோகத்தின் எக்காள சத்தம் போன்று கிறிஸ்துவைப் பாடி, புகழ்ந்து மகிமையாய்

**பூமியிலே கேட்கப்படும் எக்காள சத்தம் போன்ற இனிமையான இசை என்பது பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய ஆராதனையே**




| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி ஆராதனையில் இசை | ஒருநோக்கு செய்தி ஆராதனையில் இசை | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் 5 - 10 | பக்கம் - 11 | பக்கம் - 12 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

ஆராதனை இருக்க வேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா, பரலோக தெய்வீக அனுபவத்தோடு ஒன்றித்து, திளைத்து ஆவிக்கேற்றவிதமாய் இருக்க கடவது.புதிய ஏற்பாட்டின் வேதசத்தியத்தின்படி நாம் பாடி, துதித்து, ஜெபித்து ஆவியிலே களிகூரக்கடவோம்.

மனுஷருடைய கைவேலையாயிருக்கிற இசைக் கருவிகளினால் எழுப்பப்படும் ஓசையை விட இருதயத்திலிருந்து உண்மையாய் எழும் மெல்லிய சத்தத்தையே கேட்க அவர் ஆவலாயிருக்கிறார்.

கூடுமானவரை ஆடம்பரமான இசைக்கருவிகளோடு ஆராதிப்பதை குறைத்து, நம் உதடுகளின் ஸ்தோத்திரபலிகளால் ஆராதித்து மகிமை செலுத்தக் கடவோம்.பரிசுத்த ஆவியானவர் சபையின் ஆராதனை வேளையில் அசைவாட வேண்டும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவருக்கும் அவரை உண்மையாய்த் தொழுது கொள்ளுகிற நமக்கும் ஆவிக்குரிய போஜனம் உண்டாயிருக்கும். அப்போதுதான் அவருடைய சத்தத்தை நாம் கேட்கமுடியும்.

அவர் நம்முடைய இருதயத்தை மகிழ்ச்சியினால் நிரப்பும்போது, தெய்வீக மகிமையையும், உற்சாக உணர்வையும் அடைய முடியும்.சரீரத்திற்கேற்ற சடங்குகளையுடைய ஆராதனை சீரான ஒன்றல்ல.ஆவிக்குரிய ஆராதனை சுமத்தப்பட்ட சம்பிரதாயங்களற்ற பழமையான மரபுக்கேற்ப கடைபிடிக்கப்படக் கூடாது.அதைவிட மேன்மையான ஒன்றை அவர் நமக்கு தந்திருக்கிறார்.

கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிருந்த தேவன்
இஸ்ரவேல் எனும் தம் ஒரே ஜனக்கூட்டத்தாரும்
எருசலேமின் வழக்கத்தின்படியேயும்
ஆராதிக்கப்பட்ட பழைய ஆராதனைகளால்

(D.O.டீஸ்லே)

இன்று சீர்திருத்தம் பெற்ற புதிய உடன்படிக்கையால்
பழமையானது உருவழிந்தது (எபி 9 : 10).
நமது கர்த்தர்
அவர் உள்ளான மனுஷனில் வாசம்செய்பவர்

## காஸ்பெல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். பொள்ளாச்சி தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*


**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் – சங்கீதம் 29 : 2.

இந்த இதழில் மீண்டும் ஒருமுறை இதழ்18ல் சொல்லப்பட்டுள்ள இரண்டு உடன்படிக்கைகளை வலியுறுத்தி கூற இருக்கிறோம்.மாம்சீகமான ஆராதனையை விட்டுவிட்டு ஆவிக்குரிய ஆராதனை செய்ய தேவஜனங்கள் ஆயத்தமாகி இருக்கிறார்கள்.இவ்விதழில் இசைக்கருவிகள், பாடல்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.இன்றைய சபைகளில் ஆராதனை என்ற பெயரில் கிளப் டான்சுகளும், ரெக்கார்டு டான்சுகளுமாக, பரிசுத்த பீடம் நாடக மேடையாகிவிட்டது.

புதிய ஏற்பாட்டு சபைகளின் ஆராதனைகளில் இசைக்கருவிகள் உபயோகப்படுத்தப் பட்டதாக தெரியவில்லை.காதைப்பிளக்கும் இசைக்கருவிகளின் சத்தமும், ஏன் வண்ணவிளக்குகளின் வெளிச்சமும் புகைமண்டலங்களும், ஒருநாளும் தேவனுக்கு மகிமையை செலுத்த முடியாது.பரிசுத்தத்தோடும், உண்மையான இதயத்தோடும் நம் வாயிலிருந்து கர்த்தரை துதித்துப் புகழ்ந்து இசைக்கருவிகளோடு பாடுவதே தேவனை மகிமைப்படுத்துவதாகும். பழையஏற்பாட்டின் ஆராதனை முறைகளில் பின்பற்றப்பட்ட தகனபலியை நாம் ஏற்றுக்கொண்டு, பின்பற்றுவதில்லை?புதியஏற்பாட்டின் போதனை கண்டிப்போ அல்லது கட்டளையோ இல்லை. ஏனெனில் ஆரம்ப புதியஏற்பாட்டு சபைகளில் ஆவிக்குரிய ஆராதனைகளில் இசைக்கருவிகள் உபயோகப்படுத்தப் படவில்லை.

இந்தியா மற்றும் பல்வேறு வெளிநாடுகளிலும், அநேக சபைகளில் ஜனங்கள் இசைக்கருவிகளை ஆராதனைகளில் உபயோகிப்பது வழக்கம்.ஆவியில் உற்சாகமுள்ள சில ஜனங்கள், இசைக்கருவிகளை உபயோகித்து, உண்மையான ஆழமான ஆராதனை செய்வதே அற்புதமானது.இசைக்கருவிகள் என்று எடுத்துக்கொண்டால், சில சிறுசபையின் கூட்டத்தார் பியானோ அல்லது வேறு பலவிதமான இசைக்கருவிகளைக் கொண்டு இசைமீட்டி, பாடல் பாடுகிறார்கள். அதைவிட உற்சாக பலியுள்ள உதடுகளால் பாடி, மகிழ்ந்து கர்த்தரை ஆராதிப்பதே தகுதியான காரியம்.

பலர் இசைக்கருவிகளை உபயோகிப்பதை வழக்கமான ஒன்றாகவும், பாரம்பரியமாகவும் எண்ணுகிறார்கள்.டிரம்ஸ், பியானோ இன்னும் தங்களுக்கு விருப்பமான எந்தவொரு இசைக்கருவியானாலும் அது ஆராதனையை அலங்கரிப்பதை விட மாம்சத்திற்குரிய, உலகப்பிரகாரமான ஒன்றாகவே கருதப்படுகிறது.ஏனென்றால் சிலர் சபைகளில் டிரம் அடித்தால்தான் ஆவியில் நிறைகின்றனர்.அது நிறுத்தப்பட்டதும் ஆவியும் அடங்கிவிடுகிறது.

இசைக்கருவிகள் உபயோகிப்பதால் நம்மை அறியாமலே நாம் கர்த்தருக்குள் இன்னும் உற்சாகமாய் ஆவியில் அனலாய் ஆராதிக்க முடியும் என்பது உண்மையே. ஆனால் சிலசமயம் இது ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதல் இல்லாமையையே காட்டுகிறது.யோவான் 6 : 43-44 ல் என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்.மாம்சீகமாக ஒரு கூட்ட ஜனங்களை இழுத்துக்கொள்ள எண்ணி அதை நோக்கி செய்யப்படுகிற ஆராதனைகளில் தான் இதுமாதிரியான காரியங்கள் செய்யப்படும். தேவ ஆவியானவர் தாமே நம் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் பேசுவார்.

இசைக்கருவிகளை இசைத்துப் பாடுவது கர்த்தருடையது.அது மனுக்குலத்திற்கு அவர் தந்த ஈவு.தேவஜனங்கள் அவரைப் பாடி ஆராதித்து அவரை மகிமைப்படுத்த அவர் விரும்புகிறார்.உண்மையான அபிஷேகத்திற்கும், ஆவியில் நிரம்புவதற்கும், இசைக் கருவிகளின் சத்தத்தை உபயோகிப்பது சிலநேரம் வித்தியாசமாக உள்ளது. கர்த்தருடைய ஆராதனையில் தேவஆவியானவரின் அசைவாடுதல் இல்லையெனில் அந்த ஆராதனை பிரயோஜனமற்றது. தேவவார்த்தைக்கு கீழ்ப்படிந்து பாடி, கர்த்தரை மகிமைப்படுத்தி கூட்டமாய் பாடுதல் மிகவும் அற்புதமானது.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**


*www.thegospeltruth.org*

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : ஆராதனையில் இசை

**வேத வாசிப்பு:** உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்ட வர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் - யோவான் 4 : 23 - 24

**விளக்கம்:** தேவனுக்கு பலியிட்டு, தேவனை சடங்காச்சாரமாய் ஆராதித்து வந்த பழைய ஏற்பாட்டின் நாட்களில் இசைக்கருவிகள் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டின் நாட்களில் ஆராதனை முறைகளில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அறிவுறுத்தியபடி நம்முடைய உதடுகளால் பாடி ஆராதிக்கலாம். கூட்டமாய் பாடுதல் என்பது தேவ சபைகளில் இருக்க வேண்டிய முறைமைகளில் ஒன்று. இதில் இசைக்கருவிகள் இருந்தாலும் அதிகமான இசையும், ஆட்டம் பாட்டமும் கூடாது.



### இசைக்கருவிகளின் வகைகளும், அடையாளங்களும்

தேவ ஜனங்களுடைய வாழ்விலே பரிசுத்த ஆவியானவர் அருளிய இசைக்கருவிகளின் அடையாளங்களையும், வகை வகையான வாத்தியக் கருவிகளை காண்பது எவ்வளவு பெரிது! சாலமோன் கட்டிய கர்த்தருடைய ஆலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோது பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் 120 பேர் நின்றார்கள் (2 நாளா 5 : 12 - 14) கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. புதிய ஏற்பாட்டிலே பெந்தெகொஸ்தே நாளின் போது 120 பேர் கூடியிருந்த மேல் அறை முழுவதும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டது அங்கே இருந்தவர்கள் தேவசித்தம் நிறைவேற்று கிறவர்களாய், நீதியின் கருவிகளாய் செயல்பட்டார்கள்.

### I. பழைய ஏற்பாட்டின் இசைக்கருவிகள்

A. ஆதி 4 : 21 யூபால் கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்

B. பிரசங்கி 2 : 8 மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன்

C. யாத் 15 : 20 - 21 மிரியாம் நடனமாடினாள்

D. 2 நாளா 20 : 27-28 தம்புருகளோடும் சுரமண்டலங்களோடும் பூரிகைகளோடும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்தார்கள்

E. 1 சாமுவேல் 10 : 5 மேடையிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு முன்பாக தம்புரும் மேளமும் நாகசுரமும் சுரமண்டலமும் போகும்.

### II. தாவீது ராஜாவும் இசைக்கருவிகளும்

A. 1 சாமு 16 : 15 - 23 சுரமண்டலம் வாசிக்கிறதில் தேறினவன் தாவீது. சவுலின் மீது தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி இறங்குகையில், தாவீது தன் கையினால் வாசித்தால் சவுக்கியமுண்டாகும்.

B. சங் 33 : 1 - 3 வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள் (சங் 150 : 1 - 6)

C. 1 நாளா 15 : 15 - 16 பாடகர்கள் கீதவாத்தியங்களோடு பாடும்படி தாவீது ஏற்படுத்தினார்.

### III. தாவீது ராஜ்யத்தின் போது தேவாலய ஆராதனைக்கென்று ஏற்படுத்தப்பட்ட இசைக்கருவிகள்

A. 1 நாளா 23 : 5 துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்கள் (2 நாளா 5 : 1).

B. 1 நாளா 25 : 6 ராஜாவாகிய தாவீதின் கட்டளைப் பிரமாணமயாய்க் கர்த்தருடைய ஆலயத்தில் கீதவாத்தியம் வாசிக்க இருந்தார்கள்

C. 2 நாளா 29 : 25- 28 தாவீது ராஜா ஏற்படுத்தின கைத்தாளங்களையும், தம்புருகளையும் வாசிக்கிற லேவியர் இருந்தார்கள் (எஸ்றா 3 : 10)

### IV. தீர்க்கதரிசன அடையாள எச்சரிக்கை

A. ஏசாயா 5 : 11 - 13 விருந்து கொண்டாடுகிறார்கள்

B. ஆமோஸ் 6 : 1 - 5 தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப் போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணி (ஆமோஸ் 5 : 21 - 24)

### V. புது உடன்படிக்கையில் கட்டளையிடப்பட்ட காரியங்கள்

A. மத் 5 : 17 நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்

B. எபி 10 : 1 - 9 நிலைநிறுத்தப்பட்டது.

C. யோவான் 4 : 23 - 24 உண்மையாய்த் தொழுது கொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும்

D. அப்போ 17 : 22 - 25 கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை

### VI. புதிய ஏற்பாட்டு போதனையும் பழக்கங்களும்

A. மத் 26 : 30 ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டு போனார்கள்

B. ரோமர் 15 : 9 உம்முடைய நாமத்தைச் சொல்லி சங்கிதம் பாடுவேன்.

C. 1 கொரி 14 : 15 நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்

D. எபே 5 : 18 - 20 உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணி

E. கொலோ 3 : 16 சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டு களினாலும் உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (யாக் 5 : 13)

F. எபி 2 : 12 உம்மைத் துதித்துப் பாடுவேன்

G. எபி 13 : 15 உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி

### VII. உலகப்பிரகாரமான ஆராதனை

A. 2 தீமோ 3 : 1 - 5 சுகபோகப் பிரியராயும்

B. 1 யோ 2 : 15 - 17 உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்.

### VIII. ஆவிக்குரிய ஆராதனை

A. ரோமர் 12 : 1 - 2 இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்

B. 1 பேது 2 : 5 ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்கு

### முடிவு :

சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளி னாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு கொலோ 3 : 16

# ஆராதனையில் இசை



**உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிபட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் (யோவான் 4 : 23). கிணற்றினருகே இருந்த சமாரியா ஸ்திரீயிடம் இயேசு கூறிய வார்த்தை நாட்கள் வரும் அப்போது உண்மையான ஆராதனையும் அவரை ஆராதிக்கும் விதமும் மாறுபடும்.**

**உண்மையான தொழுதுகொள்ளுதல்**

கிறிஸ்து இவ்வுலகில் வருவதற்கு முன்பு வரை ஆசரிக்கப்பட்ட ஆராதனைகளில் சடங்காச்சரியமான பாரம்பரியமே காணப்பட்டது. தேவ ஜனங்கள் அப்படிப்பட்ட நாட்களை பரிசுத்தமாய் அநுசரிக்கும் விதமாக, காணிக்கைகளும், பலிகளும் தகனபலிகளும், பாதங்கழுவுதல், ஆராதனையில் இசை என்று பல காரியங்களுண்டு. ஆனால் இயேசு கிறிஸ்து மனிதனாய் இவ்வுலகிற்கு வந்த பின்பு, அவர் மாம்சீக ஆராதனையை விரும்பவில்லை. பரிசுத்த ஆவியினால், ஜனங்களுடைய இருதயம் நிரப்பப்பட்டு அவரை ஆராதிக்கும் ஆராதனையையே விரும்புகிறார்.இன்று பல சபைகளிலே உண்மையான ஆராதனையை கடைபிடிப்பதில்லை. ஆராதனை என்ற பெயரில் ஆர்ப்பாட்டமும், வீண்சத்தமுமே அதிகமாக காணப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் எல்லா சபைகளிலும் பரவலாக ஒழுங்கான இசைக்கருவிகளை வாசித்து ஆராதனை செய்வதே கனமும், மகிமையும் செலுத்தும் வண்ணம், தேவபிள்ளைகளுடைய ஆராதனை பரிசுத்த ஆராதனையாக மாத்திரம் நடைபெற வேண்டும்.

ஆராதனை நேரம் என்பது தேவனுக்கு மகிமை செலுத்துகிற நேரம் மனதிலும், இருதயத்திலும் தேவசிந்தனையோடு பயத்தோடும், நடுக்கத்தோடும் ஆராதிக்க வேண்டும்.

பல காரியங்கள் வேதாகமத்திலே தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனினும், நாம் பின்பற்றவேண்டிய பல சத்தியங்களை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார். இந்த கிருபையின் நாட்களில் வாழ்கின்ற நாம் ஆவிக்கேற்றவிதமாய் ஆராதனை செய்வதற்கு இசைக்கருவிகள் தடையாக இருக்ககூடாது.

ஆதி 4 : 21 காயீனின் வம்சவழியில் வந்த அவன் சகோதரனுடைய பேர் யூபால்; அவன் கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான். வேதத்திலே காயீனின் வழிவந்தவர்கள் மனுஷீகமான ஜனங்கள் உலகத்திற்குரியவர்கள். ஏனெனில் அவர்கள் தேவனைத் தொழுதுகொள்வதில்லை. அதேசமயம் சேத்தினுடைய வழிவந்தவர்கள் தேவனுடைய ஜனங்கள். ஆகவே யூபால், காயீனின் வழிவந்தவர். ஆதலால் அவருக்கு இசைக்கருவிகள் மேல் உள்ள ஆர்வம் மாம்சீகமானதையே காட்டுகிறது.

இசைக்கருவிகள் உபயோகிப்பது தவறல்ல. ஆனால் எதிரியானவன் நம் சந்ததியினரை அதன் வழியாய் இழுத்து கொள்ள அவைகள் ஏதுவாயிராதபடிக்கு, எச்சரிக்கையாய் காரியத்தை நடப்பியுங்கள். இது என் நேசருடைய சத்தம் இதோ அவர் மலைகள்மேல் குதித்தும் மேடுகள்மேல் துள்ளியும் வருகிறார் (உன் 2 : 8). இதோ மாரிகாலம் சென்றது மழை பெய்து ஒழிந்தது (2 : 11). இசையும் இசை இன்பமும் தற்காலிகமான ஒருவித சந்தோஷத்தையும் மனஅமைதியுமே தரும் ஆனால் அது நீதியைக் கொண்டுவராது.

### பழைய ஏற்பாட்டில் இசையின் பங்களிப்பு

பலவிதமான கோணங்களில், பழைய ஏற்பாட்டில் இசையின் பங்களிப்பு இருந்தது இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்தசமுத்திரத்தை கடந்த போது, ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புகளோடும் நடனத்தோடும் அவளுக்கு பின்னே புறப்பட்டு போனார்கள் (யாத் 15 : 20 - 21). இது மாம்சீக உற்சாகத்தையே காட்டுகிறது. யுத்தத்தில் ஜெயம் பெற்றதை களிப்போடு கொண்டாடுவதற்கு தம்புரு, சுரமண்டலம், பூரிகைகள் உபயோகப்படுத்தப்பட்டது (2 நாளா 20 : 27 - 28) .சவுல் மலையிலிருந்து இறங்கி வருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்பட்டான். அங்கே தம்புருவும், மேளமும், நாகசுரமும் சுரமண்டலமும் சென்றது (1 சாமு 10 : 5). எலிசா : இப்போதும் ஒரு சுரமண்டல வாத்தியக்காரனை கொண்டு வந்து வாசித்தால் (மன அமைதிப்படுத்தும் விதமாக) கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கும் என்கிறார் (2 இராஜா 3 : 14 - 15). எப்படியாயினும் தேவனுடைய ஆசரிப்பு கூடாரத்திலே ஒருபோதும் இசைக்கருவிகள் உபயோகிக்கப்படவில்லை.

தாவீதின் நாட்கள் வரை ஆராதனையில் மிகப் பிரபலமாக இசைக்கருவிகளின் பங்களிப்பு இல்லை. மேலும் ராஜாக்களின் கட்டளையின் பேரில்தான் இசைக்கருவிகள் வாசிப்போர் நிறுத்தப்பட்டார்கள்

தேவனுடைய ஆசரிப்பு கூடார கட்டுமான பணியின் மாதிரியிலே, அமைப்பு, மரவேலைகள் பரிசுத்தஸ்தலம், பலிபீடம், இசைக்கருவிகள் இவையாவும் நடைமுறை ஆராதனையில் பயன்படவில்லை.

### தாவீது இசைப்பிரியர்

தாவீது ராஜா, இளைஞனாயிருக்கும் போதே சுரமண்டலம் வாசிப்பதில் தேறினவன்.



அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும் போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்தமாவான் (1 சாமு 16 : 15 - 23) . இதுதான் இசையின் வலிமையைக் காட்டும் ஆகமம் வெறும் வார்த்தைகளால் செய்ய முடியாத ஒரு விஷயத்தை இசையினால் செய்தார் தாவீது, ஒரு இயந்திரமோ அல்லது கருவியோ செய்கிற வல்லமையால் குழப்பமும், பிரச்சனையும் தீருமானால் அது மாம்சீகமானதும் நீடித்த மாற்றமுமாய் ஆகிவிடும்.

தாவீது ராஜா இசைப்பிரியராயிருந்தார் இசைக்கருவிகள் வாசிக்கிறதில் கைதேர்ந்தவர். கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்தபிரகாரம் தேவனுடைய பெட்டியை கொண்டு வரும்போது கீதவாத்தியங்கள் முழங்கப்பட்டது (1 நாளா 15 : 15 -16). தாவீது ராஜா லேவியரின் பிரபுக்களை அதற்கென்று நிறுத்தினார். இது கர்த்தருடைய கட்டளையல்ல மாறாக தாவீது ராஜா இயற்கையாகவே சங்கீதக்காரன் தாவீது என்று சொல்லும் அளவுக்குத் தன் இசையினாலும், பாட்டினாலும் தேவனுக்கு துதி செலுத்தி அவருடைய வல்லமையை விளங்கப் பண்ணினார் (சங் 150 : 1 -6). அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் ஆனந்த சத்தத்தோடே வாத்தியங்களை நேர்த்தியாய் வாசியுங்கள் (சங் 33 : 3).

### தாவீது ராஜா ஏற்படுத்திய கீதவாத்தியக்காரர்கள்

தாவீது ராஜா, துதி செய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம் பேர் கர்த்தரைத் துதிக்கிறவர் களாயிருக்க வேண்டும் என்று சொன்னார் (1 நாளா 23 : 5). ஆசரிப்பு கூடாரத்தில் இசைக்கருவிகள் பயன்படுத்தாவிட்டாலும் கூட, ராஜாவின் கட்டளைப்பிரமாணமாய்க் கர்த்தருடைய ஆலயத்தில் கீதவாத்தியம் வாசிக்க ஊழியர்கள் இருந்தார்கள் (1 நாளா 25 : 6). தாவீது கற்பித்தபடியே கைத்தாளங்களையும், தம்புருகளையும், சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான் (2 நாளா 29 : 25 - 28). சாலமோன் கட்டிய தேவனுடைய ஆலயம் இடிக்கப்பட்டு பின்பு பாபிலோனியர் சிறைபிடித்து கட்டப்பட்ட புதிய ஆலயத்தில் எஸ்றா 3 : 10 ன் படி கர்த்தரை துதிக்கும்படி லேவியரை நிறுத்தினார்கள்.

## தீர்க்கதரிசன எச்சரிக்கை

ஏசாயா தீர்க்கதரிசி, மதுபானத்தைக் குடித்து, விருந்து கொண்டாடி, கீதவாத்தியங்களை வாசித்து களிக்கிறவர்களுக்கு ஐயோ என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.ஆமோஸ் தீர்க்கதரிசியும் கூட சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களும், சமாரியாவின் பர்வதத்தை நம்பிக் கொண்டிருக்கிறவர்களும்,.... தம்புரை வாசித்துப் பாடி, தாவீதைப் போல் கீதவாத்தியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணுகிறவர்களின் விருந்து கொண்டாடல் நின்றுபோகும் (ஆமோஸ் 6 : 1-5) என்கிறார்.

தேவனாகிய கர்த்தர் விருந்து கொண்டாடலையும், பலியையும் விரும்பவில்லை. உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன் (ஆமோஸ் 5 : 21-24). இனிமையான தாவீதின் இசை மனுஷர்களின் இருதயத்தை வசப்படுத்தி, இன்பமாக்கினாலும் கூட இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குள் ஆவிக்குரியவர்களாய் இணைக்கப்பட ஏதுவில்லாமல் போய்விட்டது.ஒரு எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார். நியாயப்பிரமாணச் சட்டப்படி மனுஷனுடைய கண்டுபிடிப்புகளால் ஆவிக்குரிய கனிகள் பெறப்படாவிட்டால்,புதிய உடன்படிக்கையிலே ஆவிக்குரிய ஈவுகளை எப்படி எதிர்பார்க்ககூடும்?

புதுஉடன்படிக்கையில் ஆவிக்குரிய ஆராதனை ஒழுங்குபடுத்தப்பட்டது
நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதற்கே கிறிஸ்து வந்தார் (மத் 5 : 17).நீதியும், பரிசுத்தமும் அவராலே உண்டாயிற்று. கிறிஸ்துவானவர்... இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார் (எபி 10 : 1-9). கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்விலே பரிபூரணமான ஆராதனையின் நிறைவும், பூரணமும் முற்றிலுமானது.மாம்சத்தை ஒழித்து, ஆவிக்குரிய மீட்பை மகிமைப்படுத்தினார்.பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று : அத்தேனரே வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவர் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை (அப்போ 17 : 22-25) என்று பிரசங்கித்தார். எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் தந்த தேவன் ஆவியாயிருக்கிறார்.நீதியின் ஆயுதத்தைத் தரித்து உண்மையாய் அவருக்கு ஆராதனை செய்ய அவர் தமது ஜீவசுவாசத்தை மனிதராகிய நமக்குத் தந்திருக்கிறார்.

## மாம்சீகமும், ஆவியும்

பழைய ஏற்பாட்டின் ஆராதனை என்பது உலகப்பிரகாரமானது.

ஆனால் இன்றோ ஆராதனை என்பது ஆவிக்கேற்றதாயிருக்க, தகனபலியும், கீதவாத்தியம் போன்ற இசையும் மாம்சீகமாக இருக்க கூடாது.புதிய ஏற்பாட்டில் சொல்லப் பட்டுள்ள கிறிஸ்துவின் ஆராதனை முறைமைகளையே ஆதிகால சபையினர் பின்பற்றினார்கள்.

**நியாயப்பிரமாண சட்டத்தின்பிரகாரம் மனிதனுடைய எந்த கண்டுபிடிப்புகளினாலும் ஆவிக்குரிய கனிகள் கிடைக்கப்பெறாது. அப்படியானால் புதிய உடன்படிக்கையிலும் அவைகளினின்று ஆவிக்குரிய கனிகளை எப்படி எதிர்பார்க்க முடியும்?**



கிறிஸ்துவினுடைய இராப்போஜனத்திற்குப் பின்பு அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினார்கள் (மத் 26 : 30). புதிய ஏற்பாட்டு சபையிலே யூபாலுடைய கின்னரமும், தாவீது ராஜாவினுடைய சுரமண்டலமும் உபயோகிக்கப்படவில்லை.ஒரு கருவியின் உதவியினால் எழுப்பப்படும் சத்தத்தைக்கொண்டு கர்த்தரை ஆராதிப்பதைப் பார்க்கிலும் பயபக்தியும், பரிசுத்தமே மேலானது (ரோமர் 15:9).

உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன்.கொரிந்து சபையினருக்கு பவுல் இவ்வாறு கூறுகிறார்.நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் (1கொரி 14 : 15). இசைக்கருவிகளைக்கொண்டு வெளிப்படும் சத்தமல்ல.மாறாக நம் இருதயமும், வாயும் தேவனுடைய துதியைப் பாட வேண்டும்.சபை நடுவில் உம்மை துதித்துப் பாடுவேன் (எபி 2 : 12) என்கின்றனர்.

தேவசபைகளில் விசுவாசிகள் பாடும் பாடல்களுக்கு மேலான வாத்திய கருவிகளின் ஓசையும், இசைக்கருவிகளின் சத்தமும் உயர்ந்து காணப்படும்போது, மக்கள் பாடும் பாடல்களின் அர்த்தம் ஒருவருக்கும் விளங்காமல் போய் விடுகின்றது.

எனவே உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி (எபே 5 : 19). சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு,தேவனுடைய பரிசுத்தவான்கள் அவரைத் தம்முடைய இருதயத்திலே பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டும் (கொலோ 3 : 16).

**புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட வாய்மொழி இசை**

சில சபையினர் இசைக்கருவிகளைக் கொண்டு கர்த்தரை துதிப்பதில்லை. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு,தேவனுடைய பரிசுத்தவான்கள் அவரைத் தம்முடைய இருதயத்திலே பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (எபி 13 : 15).நம் வாயினால் அவரைப் பாடி சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணி ஆராதிக்க வேண்டியதே அங்கீகரிக்கப்பட்ட கிறிஸ்தவ ஆராதனை.

**ஆதி திருச்சபைகளின் பாரம்பரிய பழக்கங்கள்**

வரலாற்றை புரட்டிப் பார்க்கும்போது ஆதி திருச்சபைகளில் பாடல்பாடி ஆராதிப்பதே வழக்கமாகக் கோண்டிருந்தனர்.பின்வரும் கூற்றுகளை கவனிப்போம்.



இசையின் பயன்பாடு கிறிஸ்தவ சபைகளின் வழியே பெறப்பட்டதல்ல.மாறாக யூதர்கள் பாடல் பாடும்போது மாத்திரமே உபயோகப்படுத்திய ஒன்று (ஜஸ்டின் மார்டியர் A.D 139).

நமக்கு சமாதானத்தை தரும் ஒரேயொரு ஆயுதம் இயேசுகிறிஸ்துவின் சத்தியவார்த்தைகள் மாத்திரமே.நாம் அதற்கென்று கின்னரக்காரர், சுரமண்டலக்காரர், கீதவாத்தியக்காரர் என யாரையும் நியமிக்கத் தேவையில்லை (கிளெமெண்ட் ஆப் அலெக்சாண்டிரியா A.D 153-217).

இசைக்கருவிகளான வயலின்,கிட்டார்,மிருதங்கம்,வீணை இவையாவற்றையும் கண்டுபிடித்த மியூசஸ்,மினர்வா, மெர்க்குரி இவர்களையே இதனுடைய புகழ் சாரும்.ஆகவே உலகத்தாருடையது அது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஆடம்பரமான, விரும்பத்தகாத வகையிலான இசை ஆராதனைக்கு ஏற்புடையதன்று (டெர்டுலியன் A.D 200).

கிறிஸ்தவர்களின் ஆராதனை இசைக்கருவிகளைச் சார்ந்திருக்ககூடாது (ஜான் கிறிசோஸ்டாம் A.D 345-407) .சபைகளில் இசை என்பது முந்தின நாட்களின் சபைகளைப் போன்றே மிகப் பழமையான பாரம்பரியம் (ஜோசப் பிரிங்காம் ஒர்க்ஸ் Vol III,p.137).

உலகமெங்கும் எல்லா சபைகளின் ஆராதனையிலும் முதலாவதாக உபகரணங்களற்ற வாய்மொழிப் பாடல் இருக்கும் என்கின்றார் (எமில் நாமேன், இசையின் வரலாறு Vol I,p.177) .

கிறிஸ்தவ சமுதாயத்தில் அப்போஸ்தலர்கள் காலம் மற்றும் அவர்களுக்கு பின் உள்ள வரலாறு என்று இரண்டு விதமாக உள்ளது.ஆகவே எந்த சபைப் பாகுபாடாயினும் சபை சார்ந்த காரியங்கள் தவிர மற்ற பயன்பாட்டிற்கு இசையை உபயோகிக்கலாம்.நம்முடைய உதடுகளின் உற்சாக பலியான துதிப்பாட்டுகளினாலும், சங்கீதங்களினாலும் தேவனை ஆராதிப்போம் (புது ஆக்ஸ்போர்டு இசையை குறித்த வரலாறு Vol I,p.135).

ஆதி திருச்சபைகளில் பாடல் பாடுவது வழக்கம்.ஆனால் இசைக்கருவிகளுக்கு அனுமதி இல்லை (ஹீகோ லெய்ச்சென்டிரிட்).

உள்ளார்ந்த மனஅமைதியை தருவதே இசை.வேறொன்றுமில்லை.ஆதி திருச்சபைகளில் உபயோகித்தது வாய்மொமி இசை மட்டுமே (ஹம்ப்ரி, இசையின் எழுச்சி).

**“சபைகளில் காதுகேட்காதோரோ அல்லது கண்பார்வை அற்றவர்களோ இருப்பின், இசைக்கருவிகள் உபயோகிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை ”**

-ஜாண் வெஸ்லி (1703-1791)

### ஆதி சபைகளில் இசை அறிமுகம்

5வது 6வது நூற்றாண்டுகளின் துவக்கத்தில் ஆதி சபைகளில் உட்புகுத்தப்பட்டது இசைக்கருவிகள். ஆனால் 16ஆம் நூற்றாண்டு வரை பெரிதாக உபயோகப் படுத்தப்படவில்லை(1545).ஸ்கேப்-ஹெர்சாக் என்சைக்ளோபீடியா, II.1702. வருடங்கள் பல கழிந்தபிறகு, சமூக சீர்த்திருத்தவாதிகளான அவர்கள் ஆராதனை வேளையில் இசைக்கருவிகளை வாசிப்பதை தவிர்த்தனர். இதைக் காண்கிற அல்லது கேட்கிற ஜனங்களுக்கு, இந்த செய்தி விநோதமாக தோன்றலாம். ஆயினும் இன்றும் பல சபைகளின் ஆராதனைகளில் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பழக்கம் இல்லை. ஆனாலும் இன்றும் பல திருச்சபைகளில் இனிமையான பாடல்களுடன், நேர்த்தியாக இசைக்கருவிகளை வாசித்து ஆராதனை செய்யும்போது மிக அருமையாக இருக்கும்.

### நவீனகால சபைகளில் இசைக்கருவிகளின் பங்கு

9ஆம் நூற்றாண்டுகளிலே, பல கிறிஸ்தவ தலைவர்கள் ஆராதனை வேளையில் இசையை தவிர்ப்பதால் பரிசுத்தஆவியானவருக்கு உண்மையான ஆராதனையை அநுசரிப்பதாக எண்ணினர்.1865 ல் அமெரிக்க குடியாட்சி யுத்தம் ஓய்ந்தபிறகு, அமைச்சர் பெஞ்சமின் பிராங்ளின் கூறியதாவது, ஏறத்தாழ 10,000 கிறிஸ்தவ அமைப்புகளில் 50க்கும் குறைவான கூட்டத்தார் மாத்திரமே இசைக்கருவிகளை உபயோகிக்கின்றனர். இப்படியிருந்து பின் நாட்களில் ஆர்கன்,பியானோ என தொடங்கி டிரம்ஸ் இன்னும் ஏராளமான இசைக்கருவிகள் வந்துவிட்டன .எதுவாயிருப்பினும் மாம்சீகத் தன்மை வெளிப்படக் கூடாது.



# “ சமூக சீர்திருத்த சிந்தனையாளர்களிடமிருந்து...

**ஆதிகால சபையினர் யூதர்களிடமிருந்து கற்றுக்கொண்ட ஒரு காரியம் இது**
- **மார்டின் லூதர்** (1483-1546)

இசைக்கருவிகள் தேவனை ஆராதிப்பதில் பயன்படுத்தலாம் என்றால் பழைய ஏற்பாட்டு ஆராதனை முறைகளான மெழுகுவர்த்தி ஏற்றி வழிபடுதலும், தகனபலி செலுத்தி ஆராதிப்பதும் இதுபோன்றதான முறைகளில் ஒன்றாக ஆகி விடும். ஆகவே பழைய உடன்படிக்கையை நிழலாய் மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.ஆதிகால சபைப்பிரிவினர்கள் இதை யூதர்களிடமிருந்து அறியாமையினாலே கற்றுக்கொண்ட காரியம். உலக ஆடம்பரத்தின் பொழுதுபோக்கு அம்சமே இசை. ஆனால் அப்போஸ்தலர்களின் போதனை இந்த ஆடம்பரத்தோடு ஒத்துப்போகாது
-**ஜான் கால்வின்** (1509-1564).
33வது சங்கீதம் விளக்கவுரை

வார்னர் என்பவர் அவருடைய போதனையில் தேவனுடைய சபை ஆராதனைகளில் ஆடம்பர இசை உபயோகிப்பது அவசியமற்றது என்கின்றார். மேலும் அனைத்து தேவசபைகளிலும் அதிகமான ஓசையுள்ள இசை உபயோகிக்கப் படுவதில்லை.
– C.E.**ஆர்** (1844 - 1933).
இது ஒரு புது இயக்கமல்ல

தேவசித்தத்திற்கு மாறாக நாம் செய்யும் எந்த காரியமானாலும் அது தடைசெய்யப்பட வேண்டும்: உண்மையான அர்ப்பணிப்போடு செய்யாத எந்த செயலும், பரிசுத்தமில்லாமல் செய்கிற காரியம் கர்த்தருக்கு அருவருப்பானது.நான் வயதானவன்; வயதான கர்த்தருடைய ஊழியக்காரன். இசை ஆராதனைக்கு வலிமை சேர்ப்பதாக எனக்கு தோன்றவில்லை.அறிவியல் ரீதியாக, இசையை நான் ரசிக்கிறேன்.அது நல்லது.ஆனால் தேவனுடைய ஆராதனைக்கு அது உகந்ததல்ல.கிறிஸ்தவ உலகில் உள்ள எல்லா சாபமும் அழிந்துபோக வேண்டும்

– **ஆதாம் கிளார்க்** (1762 - 1832)
ஆமோஸ் 6 : 5 ன் விளக்கவுரை.

**ஆவிக்குரிய ஆராதனை**

இந்தியாவின் கொட்டு,ஆப்பிரிக்காவின் டிரம்ஸ், ஆசியாவின் ஆர்கன், ஐரோப்பாவின் ஆர்கெஸ்ட்ரா, அமெரிக்காவின் பேன்ட்ஸ் என்று இசைக்கருவிகளின் வகைகளும் கலாச்சாரத்திற்கேற்ப வகை வகையாக மாறிக்கொண்டே போகின்றது. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1யோவான் 2:15-17).

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவை எச்சரித்து கூறுகிறார்.மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு (2தீமோ 3:1-5).

**பரிசுத்த ஆவியானவர் அசைவாடும் ஆராதனை**

தியாகத்துடன்கூடிய பரிசுத்தவாழ்வு எத்தனைபேருடைய வாழ்விலே இன்று சாத்தியமாகிறது?

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவரீருடைய நன்மையும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1-2).

ஆவிக்கேற்ற ஆராதனை என்பது இசைக்கருவிகளின்றி ஆராதிப்பது மாத்திரமல்ல, பரிசுத்த ஆராதனைக்கு தடையாய் இருக்கிற காரியங்களை நம்மை விட்டகற்றி விட வேண்டும்.ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் (1பேதுரு 2:5).

# வேதாகம விளக்கங்கள்

| | | |
|---|---|---|
| ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் | - | யோவான் 4 : 23-24 |
| உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி | - | எபேசி 5 : 19 |
| ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு | - | கொலோ 3 : 16 |
| உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி | - | கொலோ 3 : 16 |
| நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன் | - | 1 கொரி 14: 15 |
| உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி | - | எபேசி 5 : 19 |



# கேள்விக்கு என்ன பதில்?

**கர்த்தருடைய ஆராதனையில் இசைக்கருவிகளை உபயோகிப்பது பாவமாகுமா?**

இசைக்கருவிகளின் உபயோகம் தவறல்ல. ஆனால் தேவனுடைய சபைகளிலும், ஆராதனையில் உபயோகிப்பது தகுதியான ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இருக்க வேண்டும்.தேவனுடைய ஜனமாகிய நாம் அவரைத் தொழுதுகொள்ளும் விதம், நோக்கம், எண்ணம், அவருடைய சித்தம் இவைகளை கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும்.

**இசைக்கருவிகளோடு தேவனை ஆராதித்த தாவீதின் கட்டளைகளை ஏன் ஆராதனையில் கடைபிடிக்ககூடாது, குறிப்பாக, தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனுஷன்தானே?**

அனைத்து வேதவாக்கியங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.சங்144:1 ல் தாவீது சொல்கிறார். என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.தேவனாகிய கர்த்தர் தாவீதோடு கூட இருந்து எல்லா யுத்தங்களிலும், எதிரிகளைக் கொன்று ஜெயமெடுக்க உதவினார்.ஆனால் எதிரிகளை நேசிக்கவும், யுத்தமின்றி சமாதானமாய் வாழவுமே கர்த்தர் விரும்புகிறார்.தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் (மத் 5: 38-45).மேலும் தாவீது பல மனையாட்டிகளும், மறுமனையாட்டிகளும் உடையவராய் வாழ்ந்தும், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருந்தார். ஆனால் இந்த காரியத்தில் தாவீதை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு வாழ அவர் போதிக்கவில்லை.அவர் எச்சரிக்கிறார்.சத்தியத்தை சத்தியமாக கைக்கொள்ள வேண்டும். சங்கீதம் 150 : 3-8 மேலும் பல சங்கீதங்களில் இசைக்கருவிகளின் உபயோகத்தையும், நடனத்தோடும் கர்த்தரைத் துதிப்பதை தாவீது வலியுறுத்துகிறார். புதிய ஏற்பாட்டின் சட்டப்படி, புதிய உடன்படிக்கையின் பிரகாரம் பரிசுத்த தேவனை பரிசுத்தத்தோடு ஆராதிப்போம்.ஆம் தாவீதின் நாட்களிலே கர்த்தர் தாவீதை அவருடைய இருதயத்திற்கு ஏற்றவராக கண்டார். அதுபோல இன்றைய நாட்களிலும் தாவீதிலும் பெரியவர்கள் எழும்பும்படி, சத்தியத்தை அறிந்துகொண்டு உணர்வடைவோம் - ஹார்லன் சொரல்.

யாக்கோபு 4 : 17 - ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமறபோனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். இசையின் மேலுள்ள நாட்டத்தினால் இருதயத்தில் பாவம் பெருகிவிடக்கூடாது. நம் உதடுகளின் ஸ்தோத்திரபலி, பாடல்களை துதித்துப்பாடி அவரை ஆராதிப்பதே தகுதியானது. ஆவிக்குரிய ஆராதனையே நிச்சயம்.

**ரோமர் 15 : 9 லும் யாக்கோபு 5 : 13 லும் சொல்லப்பட்டுள்ள பாடு என்கிற வார்த்தையானது கிரேக்க வார்த்தையான சாலோவிலிருந்து பெறப்பட்டது. ஆகவே இந்த புதிய ஏற்பாட்டு சத்திய வார்த்தைகள், இசைக்கு ஆதரவளிக்கிறதா?**

இல்லை.இந்த வேதவசனங்கள் இசையின் உபயோகத்தைக் குறிக்கவில்லை.கிரேக்க வார்த்தையான சாலோ என்பதும் மாற்றுக் கருத்தாகவே விளங்குகிறது.

கிரேக்க மொழி பெயர்ப்பிலே அது பாடுவது என பொருள்படும். எனவே இசையைப்பற்றிய உண்மை தன்மைகளை உணரவேண்டும்

தாயர்ஸ் கிரேக்க ஆங்கில மொழிபெயர்ப்பிலே சாலோ என்பது அவருடைய துதியை சொல்லிப் பாடுவதே ஆகும். புதிய ஏற்பாடு விளக்கவுரை என்பதிலும் பாடுவதும் துதிசெய்வதுமே என பொருள்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY



உங்களுக்குத் தெரியுமா?

அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும், தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து வணங்கினார்கள் – வெளி 5 : 8.

எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்;நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.பரலோகத்திலே தேவனைப் புகழ்ந்து ஓயாமல் பாடிக்கொண்டிருக்கும் தேவதூதர்கள் மகிமையாய் அவரைப் பாடுவதைக் குறித்தே அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது.பரிசுத்தஆவியினால் ஒன்றுபட்ட ஐக்கியமான துதியை நமக்கு உணர்த்துகிறது.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## உங்கள் சுரமண்டலங்களை இசையுங்கள்

மீட்கப்பட்டோராகிய நாம் சுரமண்டலங்களை
இசைத்து கர்த்தரைப்
பாடி புகழ்ந்தாலும்
ஓ இசையே ! இனிமையின்
இசையே பரிசுத்தவான்களின்
ஆவிக்குரிய ஆராதனையே இனிமை



இசைக்கருவிகளை வாசிப்பவர்கள், வாசிக்கத் தொடங்குமுன் சுருதி, தாளத்திற்கேற்ப அதை ஏற்றி, இறக்கி சரியாக அமைத்துக் கொள்வார்கள். ஏனென்றால் சுருதி சரியாக அமையவில்லையெனில், ஒவ்வொரு கருவியும் வாசிக்கப்படும்போது ஒன்றுக்கொன்று ஒவ்வாததாயிருக்கும். ஆகவே அதை ஒருங்கிணைத்து வழிநடத்திச் செல்லும்போதுதான் இசை அழகானதாக அமையும்.

அதுபோலதான் தேவனை ஆராதிக்க ஒரு கூட்ட ஜனங்கள் வரும்போது, பரிசுத்தஆவிக்கு நேராக நம் கண்களும், ஆவியும் ஒரேமாதிரியாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். ஆகவேதான் உங்கள் கின்னரங்களை வாசியுங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

கிறிஸ்துவிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட காரியங்களை பரிசுத்தத்தோடும், நடுக்கத்தோடும், பயபக்தியோடும் துதித்துப் பாடி, அவருடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்தக்கடவோம்.

பரிசுத்தஆவியின் தூண்டுதலின்பேரில் இருதயத்திலிருந்து வெளிப்படும் இசையின் மூலம் தேவனை ஆராதிக்க வேண்டும். தேவனுடைய பரிசுத்தவான்களும், தேவஜனங்களும் தங்கள் வாழ்வின் கசப்பு, விருப்பு, வெறுப்புகளை மறந்து, இருதயத்தையும், சிந்தையையும் பரிசுத்த ஆவிக்கு நேராக ஒப்புக் கொடுங்கள். ஜெபசிந்தையோடும், பரிசுத்தத்தோடும் கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316